முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை
வழக்கு எண். ஒ.எஸ்..எண். 223/2021
2022-ம் வருடம் மார்ச் மாதம் 10-ம் நாள் வியாழக்கிழமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மனோகரன் | தந்தை பெயர் | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | வயது | : | |

P.W.2 - என்பவரது வாக்குமூலம் (1873-ம் வருடத்திய 10-வது விதியின் படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.
தேதி : 10.03.2022.

## வாக்குமூலம்

நான் வாதி தரப்பு 2வது சாட்சியாவேன். நான் நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லியவை தான்.

## குறுக்கு விசாரணை

என் தகப்பனார் கனரா வங்கி புதுக்கோட்டையில் அதிகாரியாக வேலை பார்த்தார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதரி ஒன்று மற்றும் சகேதாரர்கள் என்னை சேர்த்து மூன்று பேர்கள். இறந்துபோனவர்தான் பிரதிவாதி மங்கையர்கரசியின் கணவர். நான் பத்திர எழுத்தரா என்றால் பதிவு பெற்ற பத்திர எழுத்தர் இல்லை. ஆனால் பத்திரம் எழுதுவேன். 3ம் பிரதிவாதியின் குடும்பம் வடக்கு 4ம் வீதியில், வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தில் 40, 50 வருடங்கள் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். வடக்கு 4ம் வீதியில் சுமார் 1000 வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 500 வீடுகள் இருக்கலாம். 40,50 வருடங்களாக அதே இடத்தில் இருப்பதால் அந்த வீட்டிற்கு அருகில் ரொம்ப நாள் பழக்கம் உள்ளவர்கள் அருகில் இருக்கிறார்கள் என்றால் அருகில் உள்ளவர்கள் அதிகம் படித்த்வர்கள், அந்தஸ்து உள்ளவர்களா என்றால் எனக்கு தெரியாது. நான் என் தம்பிக்கு திருமணம் செய்த பிறகுதான் வடக்கு 4ம் வீதிக்கு போய் வருகிறேன். சுமார் 12 வருடங்களாக விசேஷங்களுக்கு போய் வருவேன். உயில் தயார் செய்த பிறகு நான் எப்பொழுது போய் கையெழுத்து போட்டேன் என்றால் நான் உயில் தயார் செய்வதற்கு முன்பே போய்விட்டேன். நான் போகும்போது காலை 11, 11.30 மணி இருக்கலாம். என் தம்பி மகள் என்னை போன் மூலமாக கூப்பிட்டார். அப்போது அங்கு என் தம்பி மகள், நான், என் நண்பர் ராஜா, ஜெயலெட்சுமி ஆகியோர் இருந்தோம். நான் என் தம்பி மகள், தம்பி மனைவி, எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களுடன் சுமூகமாக பேசிக்கொண்டிருந்தேன்

என்றால் சரிதான். நான் மற்றவர்களை வைத்து உயில் எழுத கேட்கவில்லையா என்றால் நான் போகும்போது என்னை உயில் எழுததான் கூப்பிட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் போன பிறகுதான் தனக்கு வயதாகிவிட்டதால் லெட்சுமி அம்மாள் சொல்லி என்னிடம் உயில் எழுத சொன்னார். உயிலை நான் எழுதவில்லை. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என்கு பத்திரம் எழுதும் விபரம் தெரியும் என்றால் தெரியும். நான் எஸ்.எஸ்.எல்.சி படித்திருக்கிறேன். பத்திரம் யாருக்கு எழுதுகிறார்களோ அவர்களே எழுதக்கூடாது என்று நான் சொன்னேனா என்றால் இல்லை. உயில் பத்திரத்தை பத்திர பதிவு அலுவலகத்தில்தான் எழுதுவார்கள் என்றாலும் உயில் அன்றைய தினம் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்றால் பத்திர பதிவுகளை பின்னால் செய்துகொள்ளலாம், தற்போது எழுதிக்கொள்ளலாம் என்று சொல்லி எழுதப்பட்டது. மங்கையர்க்கரசியின் சகோதரர்கள் இருந்தால்தான் நான் கையெழுத்து போடுவேன் என்று சொன்னேனா என்றால் அந்த சூழ்நிலை எழவில்லை. நான் மட்டும்தான் மங்கையர்கரசியுடன் சுமூக உறவில் உள்ளேன் என்றாலும் மற்றவர்கள் சுமூகமாக இல்லை என்றாலும் சரியல்ல. ராஜ் என்பவரும் நானும் என் வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போதுதான் போன் வந்தது. அவரை என்னுடன் கூட்டிச்சென்றேன். அவ்வாறு யாரும் வந்துவிடுவார்களா என்றால் எனக்கும் அவருக்கும 30 வருட பழக்கம் அதனால் வந்துவிட்டார். உயில் எழுதுவதற்கான விபரத்தை யார் சொன்னார்கள் என்றால் ஜெயலெட்சுமிதான் சொன்னார். ஏற்கனவே ஜெயலெட்சுமியின் கணவர் ஒரு உயில் எழுதியிருந்தார் அதை அடிப்படையாக வைத்து உயிலின் ஷரத்துக்களை எழுதினார். நான் உயில் சம்மந்தமாக ஏதேனும் கேட்டேனா என்றால் எதுவும் கேட்கவில்லை. அவருடைய சொத்திற்கு அவர்கள் எழுதுகிறார்கள். உயிலை எழுதிய அர்ச்சனா ஜெயலெட்சுமியிடம் படித்துக்காண்பித்தார். நான் அதை படிக்கும் போது கேட்டேன். நான் 3ம் பிரதிவாதி மங்கையர்கரசி ஆகியோர் கூட்டுச்சேர்ந்து ஏற்கனவே ஜெயலெட்சுமி கையெழுத்து போட்டிருந்த பேப்பரில் எழுதி உயிலை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. உயில் எழுதும்போது அவர் நல்ல திடகாத்திரமாகத்தான் இருந்தார் என்றால் அவர் மருந்து மாத்திரை சாப்பிட்டுக்கொண்டிருந்தார். ஆனால உயிருக்கு போராடிய நிலையில் இருந்தாரா என்றால் இல்லை. உயிலை எழுத வேண்டியம் அவசியம் ஏற்படவிலலை. மங்கையர்கரசி வீட்டில் உயிலை எழுதி பின்பு அதை நாங்கள் பூர்த்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.